RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s222711

அம்பையின் புனைவுகளில் பெண்ணியச் சித்திரங்கள்

வே. கண்ணதாசன் [அ, *]

[அ] மொழித்துறை, எஸ்.ஆர்.எம் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-603203, தமிழ்நாடு, இந்தியா

Feminism in Ambai's Works

V. Kannadasan [a, *]

[a] Department of Languages, SRM Institute of Science & Technology, Chennai-603203, Tamil Nadu, India

* Corresponding Author: vlkannadasan@gmail.com

Received: 05-09-2022
Revised: 06-11-2022
Accepted: 10-11-2022
Published: 05-12-2022

Check for updates

ABSTRACT

In the history of Tamil literature, Ambai is known as the one who created the basic structure of modern feminist concepts through her selected fictions. Ambai's fictional ideals can be identified as, she herself as one of the women who approached this social structure in general, and intervened in the problems in order to break the structure and get rid of it. She has defined the critical trend of feminist values and values by revealing the secondary status and physiological view given to women in social spheres including the family. Feminism is known as the literary target of exploitation of women's labor, physical and mental exhaustion, contradictions caused by sexual tendencies, micro-oppression through it, psychological problems with relational entanglement.

Keywords: Feminism, Ambhai Creative Works, Myths of Ambhai, Society, Psychological Problems, Exploitation of Female Labour

முன்னுரை

தமிழ் புனைவிலக்கிய வரலாற்றில் தனக்கெனத் தனித்தடம் அமைத்து கடந்த அரைநூற்றாண்டுகளாகக் காத்திரமானப் படைப்பாக்கங்களை அளித்து வருபவர் லஷ்மி எனும் இயற்பெயர் கொண்ட எழுத்தாளர் அம்பை. தமிழ்ச் சமூகத்தில் வேரூன்றிப் போன மானுட மூடநம்பிக்கைகளைப் பகடி செய்வதுடன், மனித உறவுநிலைப் பின்னலுடனான உளவியல் சிக்கல்களை இனம்காட்டி அவற்றை மையமிட்ட பெண்ணியப்பார்வை கொண்ட புனைவுகளை உருவாக்குவதில் கைதேர்ந்தவராக அறியப்படுகிறார். நயமான அங்கதமும், பெண்ணிய முனைப்பும், தெளிந்த அழுத்தமான பாணியும் கொண்ட எழுத்து மூலமாக சமகால வாழ்க்கையின் உறவுநிலைகளைப் பற்றி உளவியல் ரீதியிலான அவதானிப்புகளைக் கொண்ட புனைவுகளை உருவாக்கிக் கொண்டிருப்பவர். தமிழிலக்கியப் பரப்பில் அறுபதுகளின் பின்பகுதியில் பெண்களுக்கான விடியல் குறித்த கருத்துருவாக்கங்கள் கால்கொண்ட போழ்து சமையல் குறிப்புகளை எழுதுவதும் குடும்பச் சித்திரங்களை வாசிப்பதும் அவர்களின் ஆகப்பெரும் சாதனையாகக் கருதப்பட்ட சூழலில்தான் சி.எஸ்.லஷ்மி, அம்பையாக மாறிய காட்சி நிகழ்ந்தது. அதற்கு முன்னரே குடும்பச் சித்திரங்களுக்குள் புதைந்திருந்த பிற்போக்குத்தனத்தைச் சுட்டிக்காட்டியவர்களும் அதில் மீறலை நிகழ்த்தியவர்களும் உண்டுதான் என்கிற போதும் நவீன இலக்கியத்தில் அம்பை நிகழ்த்திய உடைப்பு முக்கியமானது. பெண்ணின் அறிவை, தெளிவை, அவை புறக்கணிக்கப்படும் பேதமையை எளிமையாகவும் எள்ளலோடும் எடுத்துக்காட்டினார் அம்பை. தன்னைப்பற்றிப் பெண்வரைகிற சித்திரம் அனைத்துமே பெண்ணியப்படைப்பு ஆகிவிடாது நுண்ணுணர்வும் அரசியல் தெளிவும் கைகூடி வருபவையே

காலத்தைத் தாண்டிநிற்கும் படைப்புகளாக மிளிரும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. அந்தவகையில் பீறிட்டுப் பாய்ந்த பிற்காலப் பெண்ணிய எழுத்துக்களுக்கு அம்பையே முன்னோடி எனக் கருதுவதற்கு அவரது காத்திரமான கதையாக்கங்கள் இடமளிக்கின்றன.

புனைவுகள் - பெண்ணியச் சித்திரங்கள்

அம்பை தனது ஒவ்வொரு படைப்பிலும் குடும்பம் உள்ளிட்ட சமுதாய வெளிகளில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள இரண்டாந்தர நிலைமையையும் உடலியல்சார் பார்வையையும் வெளிப்படுத்திப் பெண்ணிய மதிப்பீடுகள், விழுமியங்கள் குறித்த விமர்சனப் போக்கிலான வரையறைகளை வகுத்துத் தந்தவர். இந்தியக் குடும்பம் மற்றும் சமுதாயமரபு முறைகளுக்கு மாறானவையாக, அவற்றைக் கண்டித்து விமர்சனம் செய்வனவாகத் தன் படைப்புக்களத்தை அமைத்துக் கொண்டமையால் தொடக்கத்தில் மரபுசார்ந்த இதழ்கள் இவரது புனைகதைகளை வெளியிடத் தயக்கம் காட்டிய வரலாறுகளும் உண்டு. அக்காலத்தில் குழந்தைகளுக்கென தனித்த கட்டமைப்புடன் வெளிவந்த கண்ணன் இதழில், நந்திமலைச்சாரலிலே எனும் துப்பறியும் நாவல்வழித் தன் எழுத்துலகப்பயணத்தைத் தொடங்கியதுடன் திராவிடப் பெண்தெய்வமாய் அறியப்படும் அம்பையின் பெயரைச் சூடிக்கொண்டு எழுத்துலகில் கால்பதித்த பெருமைக்குரியவர். லக்ஷ்மி எனும் தனது இயற்பெயரை அம்பை எனப் புனைந்துகொண்டு எழுத எண்ணியதன் பின்னணியை லக்ஷ்மி என்னும் புனைபெயரைச் சூட்டிக்கொள்ள விரும்பவில்லை. ஏனென்றால் வெள்ளிக்கிழமை பிறந்த எல்லா குழந்தைகளுக்கும் லக்ஷ்மி என்றுதான் பெயர்சூட்டுவார்கள். 'தேவன்' எழுதிய பார்வதியின் சங்கல்பம் என்னும் நாவலில் கணவனால் கைவிடப்பட்ட பெண்ணாகிய பார்வதி 'அம்பை' என்ற பெயரில்தான் எழுத ஆரம்பிப்பாள் என்பதாலும் மற்றும் மகாபாரத அம்பையின் ஆணுமற்ற பெண்ணுமற்ற ஆண் பெண் இரண்டுமான பால்விளக்கமற்ற தன்மையை விரும்பியதால் அப்பெயரையே எனக்குச் சூட்டிக் கொள்ள முடிவெடுத்தேன்" என்கிறார். தனக்குப் புனைந்து கொண்ட பெயரில் இருந்தே அவர் யாருக்கான இலக்கியப் படைப்புக்களை உருவாக்க விழைந்தார் என்பதையும் தன் புனைவிலக்கியக் கருப்பொருள் என்னவாக இருக்கவேண்டும் என்பதில் தெளிவு கொண்டிருந்தார் என்பதையும் அறிய இயலும். அரைநூற்றாண்டு காலத்தமிழ் இலக்கியத்தின் புனைகதைப்பரப்பிலும் உரையாடல் தளத்திலும் நிகழ்ந்த முக்கியமான வருகைகளுள் ஒன்றாகவே அம்பையின் வருகையை இலக்கிய ஆய்வாளர்கள் இனம்காண்கின்றனர். நவீன பெண்ணியவாதக் கருத்துகளின் அடிப்படைக் கட்டுமானத்தை அமைத்தவராக அம்பையை இனம்காணும் எழுத்தாளர் ஜெயமோகன்,

“தமிழில் பெண்நிலைவாத எழுத்தாளர்களுக்கு முன்னோடி அம்பை (1944). பெண்களின் மீதான ஒடுக்குமுறை குணங்கள் கோபங்கள் அவரது படைப்புகளில் வெளிப்படுகின்றன. நேரடித்தன்மையும் கூர்மையான மொழியும் அவற்றின் சிறப்பம்சங்கள், கோட்பாட்டுத்தன்மை கொண்ட அணுகுமுறையும் பிரசங்கத்தன்மை கொண்ட சித்தரிப்பும் கலைரீதியான ஒருங்கிணைவு இன்மையும் கொண்டவை. பெண்ணியம் தமிழிலக்கியத்தில் ஒரு முக்கியமான போக்காக மாறக்கூடும் என்பதால் அதன் முக்கியக் கோட்பாட்டாளராகிய இவரை நாம் கவனிக்க வேண்டியுள்ளது” என்கிறார் (Jeyamohan, 2011).

நீண்டகாலமாகத் தமிழ் எழுத்துலக வரலாற்றில் இருந்து வந்த மரபுசார் சமுதாயக் கட்டுக்கோப்பை மீறி முளைத்த தலைசிறந்த பெண்படைப்பாளுமையாக மிளிர்ந்து வரும் அம்பையின் படைப்புகளின் வழி அவர்காட்ட முயலும் பெண்ணியத்தை ஆய்வது அவசியம். ‘சிறகுகள்முறியும்’ புனைவுத் தொகுப்பிலுள்ள முதல் சிறுகதை சூரியன்’. என்பதாகும். 1972 இல் தீபம் தீபாவளி இதழில் வெளிவந்த இந்தச் சிறுகதையையே அம்பையின் முதல் சிறுகதையாக இனம் காணமுடிகிறது. சிறகுகள் முறியும், காட்டில் ஒருமான், வற்றும் ஏரியின் மீன்கள், ஒரு கறுப்புச் சிலந்தியுடன் ஓர் இரவு, சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை, சரோஜா திறக்கும் உலகம், அந்தேரி மேம்பாலத்தில் ஒரு சந்திப்பு, வீட்டின் மூலையில் ஒரு சமையலறை, செல்லம்மாள் நினைவுக் குறிப்புகள் போன்ற தொகுப்புகளில் சிறியதும் பெரியதுமாய் அவர் படைத்துள்ள கதையாக்கங்களும் புனைவுகளும் பெண்ணுலகின் பல்வேறு பக்கங்களையும் பரிமாணங்களையும் படம் பிடித்துக் காட்டுபவை. திரைச்சீலைகளில் முகம் மறைத்தும் நிலைக்கதவுகளின் பின்னிருந்தும் சமையற்கட்டுக்குள் புழுங்கியும்

தவித்தவர்களை வரவேற்பறைக்கு கொண்டு வந்து சேர்த்த படைப்பாளரான அம்பை தன்னுடைய எழுத்துலக இலக்கியப் பயணம் எதை நோக்கியதாய் இருக்க வேண்டும் என்பதில் தெளிவான புரிதலையும் தீர்க்கமான தரிசனத்தையும் கொண்டிருந்தார் எனக்கருதலாம். எனவேதான் இலக்கியம் குறித்த தனது வரையறையாக,

வாழ்க்கையில் உள்ள உண்மைகளைப் பற்றியது அல்ல இலக்கியம். உண்மை என்று நாம் உணர்வதற்கும் நமக்கும் இடையே உள்ள உறவு பற்றியது இலக்கியம். இந்த உண்மையின் தன்மை மாறியபடி இருக்கிறது நம்வாழ்வில் என்பதுதான் உண்மை. வாழ்க்கையின் போக்குக்கு ஏற்ப இதை நாம் பல்வேறு கட்டங்களில் பலவகைகளில் உணருகிறோம். அதை நாம் எப்படி மொழியாக்குகிறோம் என்பதுதான் இலக்கியம். நம் உணர்வுகளின் வெளிப்படை சில சமயங்களிலும், அவற்றின் மறைப்பு சில சமயங்களிலும், உணர்வுகளை இலக்கியமாக்குகிறது. இந்த வெளிப்படை-மறைப்பு இவற்றின் கண்ணாமூச்சிதான் இலக்கியம் என்கிறார் (Sridhar Narayanan, 2014).

சமூக வெளியில் உரிமை மறுக்கப்பட்டதன் ஊடான பெண்ணிய மனவோட்டங்களும் உறவு மற்றும் உணர்வுநிலை மேலிட்ட உளவியல் சிக்கல்களும் மரபுப்போர்வையில் ஒடுக்கப்பட்டு மறைக்கப்பட்ட உண்மைகளுமே தனது இலக்கிய இயங்கியலுக்கான அடித்தளம் என்பதை இதன்வழி இனம்காட்ட முயல்கிறார். மேலும் ”என் கதையின் பெண்கள் தங்கள் மனத்தில் உள்ளதை வெளிப்படையாகப் பேசுபவர்களாகவும், குரல் இழக்காதவர்களாகவும் இருந்தாலும் அவர்களுக்குள் பெண்களை ஒடுக்கும்பல விஷயங்களுக்கான ஆதரவு இருந்தது. அவர்கள் அறச்சீற்றம் உள்ளவர்களாகவும், துணிந்து சிலமுடிவுகளை எடுப்பவர்களாகவும் இருந்தாலும், சிலஎல்லைகளை அவர்கள் தாண்டமுயலவில்லை எனலாம். அவர்கள் சாதாரணப் பெண்ணை உயரே இருந்து துச்சமாகப் பார்க்கும் காவியநாயகிகள் போல் இருந்தனர். உடல் என்ற விஷயம் பெரிதும் என்னைப் பாதித்திருப்பதை இக்கதைகளில் காணலாம். உடல் என்பது வீட்டில் பேசப்படாத ஒன்று. அது இச்சைகளைத் தோற்றுவிக்கும் ஒன்று. பெண்ணின் இச்சைகள் வெளியிடப்படாதவை வெளியிடக் கூடாதவை., உடலே இல்லாதவர்கள் போல், உடலே இல்லாத ஒரு வெளியில் மிதந்து கொண்டிருந்தோம். அவையே என் படைப்புகளுக்கு ஆதார மையமாகின்றன” என அம்பை தனது பெண்ணிய நோக்கிலான படைப்புலகு குறித்த சுயவிமர்சனத்தை முன்வைக்கிறார். பெண்களின் உலகம் என அதுவரை ஆண்கள் இனம் காட்டிச் சித்தரித்தவற்றை மூர்க்கமாக மீறும் படைப்பாக்கங்களாகவே அவை அமைந்துள்ளன. இதன்வழி அவர் பெண்ணியச் சிந்தனைகளைத் திணிக்கிறார் என்றோ ஆண்களை வன்முறை மேலிட்டுக் கொடூரமாகச் சித்தரிக்கிறார் என்றோ கொள்வதற்கில்லை. சமூக இயங்கியலில் அதுவரை பெண்களை ஒடுக்கும் வகையில் இருந்து வந்த மரபான சடங்குகளையும் மூடநம்பிக்கைகளையும் மறுதலிப்பதாய் அமைந்திருப்பதுடன் பெண்ணிய உரிமைமறுப்பு ஊறிப்போன ஒருபிற்போக்குச் சமூகத்தின் பல்பரிமாணங்களை இனம் காட்டுவதாகவே கொள்ளமுடியும். பெண்களின் உழைப்பு சுரண்டப்படுதல், உடல் மற்றும் மனரீதியாக ஒடுக்கப்படுதல், பாலியல் பேதப்போக்குகளால் ஏற்படும் முரண்கள், அதன் ஊடான நுண்ணிய அடக்குமுறை என பெண்ணியநோக்கமேஅ வருடைய இலக்கிய இலக்காக அறியப்பட்டாலும் எந்த ஒரு படைப்பையும் பால்வேறுபாட்டுடன் அணுகும் போக்கு அவசியம் இல்லாதது எனும் கருத்தியல் கொண்டவர்.

“இலக்கியத்தில் பெண்எழுத்து ஆண்எழுத்து என்றுசிலர் குறிப்பிடும்போது அவர்கள் மனத்தில் இருப்பது பால்நிலை பற்றிய விளக்கம் இல்லை என்பது புரிந்துவிடுகிறது. அவர்கள் பெண் என்று கூறும் போது அது இலக்கியத்தரம் பற்றியது. அது ஓர் அளவு கோல். பெண் என்ற அடிப்படை ஒன்றை உருவாக்கி அதில் ஏற்றப்பட்ட தரஅளவுகோல். அடிப்படை என்பது நேராக உடலைப் போய் முட்டும் ஒன்று. ஒருவகை உடல் இருப்பதால் ஒருவகை மொழி பிறக்கிறது என்று வலியுறுத்துவது. இவைதான் வித்தியாசங்கள் என்று நாம் பட்டியலிட்டால் அந்தச் செயல் இருவகை வெளிப்பாட்டை மட்டுமல்ல, இருவகை உடல்களையும் குறுக்குகிறது என்றே நினைக்கிறேன். ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தில், ஒவ்வொரு காலத்தில் வேறுவேறுவகையில் உணரும் உடல் என்ற ஒன்றை, ஓர் இலக்கணத்திற்கு, ஒருவிளக்கத்திற்கு உட்பட்டுத்துவது எனக்கு உடன்பாடில்லை. ஆனால் பெண்ணாக வாழ்வதால், பெண் என்ற நிலையிலிருந்து உலகை எதிர்கொள்ள நேர்வதால் ஒருவிதமொழி, ஒருவிதவெளிப்பாடு உருவாகலாம். அது உடல்சார்ந்தது அல்ல. உடல் பற்றிய பட்டுணர்வைச் சார்ந்தது.

உடல் சமுதாயத்தில் ஆக்கிரமிக்கும் இடத்தைச் சார்ந்தது. காலம், சரித்திரம் இவற்றால் தொடப்படாத உடல் இல்லை. ஒற்றை விளக்கம் உள்ள உடல் இல்லை பெண்உடல். பெண் உடலை மறுவாசிப்பு செய்வதும் அவரவர் பட்டுணர்வை ஒட்டியே இருக்கும்" என்கிறார் (Sridhar Narayanan, 2014). அதனால்தான் பெண்ணியப் படைப்பாளர்களுக்கான வரையறையை தன்வாழ்வியலில் இருந்தே வரித்து

பெண்ணியச் செய்திகளை உரத்துச் சொல்லிக் கொண்டே இருப்பது ஒரு பெண்ணிய எழுத்தாளர் வேலை அல்ல. வாழ்க்கையில் சில நொடிகளில் வெளிச்சம் பெறும் உணர்வுகள், உறவுச்சிதறல்கள், இயற்கையுடன் தொடர்ந்து ஒன்றியும் விலகியும் வரும் வாழ்க்கை இவை எல்லாமும் மொழியும், எழுத்தின் தன்மையும். வாழ்க்கையும் மாறும் பதிவுகள்தாம். பெண், ஆண் என்று விளக்கம் பெறும் நபர்களை நான் தொடர்ந்து கேள்விக்குட்படுத்தியவாறு இருக்கிறேன். எல்லாவித எல்லை மீறல்களும் சாத்தியம் என்று சொல்ல நினைக்கிறேன். வரையறைகளை அழித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று கருதுகிறேன்" என தன்மனப்போக்கை எடுத்துக்காட்டுகிறார்.

அம்பையின் "சிறகுகள் முறியும்" என்ற என்னும் கதைத் தொகுப்பு தற்கால அறிவுஜீவிகளால் தேர்ந்த பெண்ணியப் படைப்பாக கொண்டாடப்பட்டாலும் அம்பை அப்படைப்பை உருவாக்கிய காலகட்டத்தில் அதனை வெகுசன இதழ்கள் வெளியிட மறுத்ததுடன் பல்வேறு பிற்போக்குத்தனமான விமர்சனங்களை முன்வைத்துப் புறம்தள்ளியதையும் அறியமுடிகிறது. மரபுசார் சமூகச்சூழல் ஒருபடைப்பை இனம் காண்பதில் கொண்டிருந்த இத்தகைய மனப்பான்மையை அக்காலத்தில் பல்வேறுபடைப்புகள் எதிர்கொண்ட வரலாறு தமிழுலகம் அறிந்ததே. வாசகன் வாசிக்க வேண்டியதை யாரோ ஒருவர் தீர்மானிப்பதைப் போல் எழுத்தாளன் எழுதவேண்டியதையும் யாரோ ஒருவர் தீர்மானித்த சமூகப்பின்னணியில் இத்தகையப் படைப்புகள் வெளிவரவிடாமல் தடுக்கப்படுவது இயல்பான நிகழ்வே ஆகும். 1972-இல் வெளியான "சிறகுகள்முறியும்" படைப்பு கணவன், மனைவி உறவுக்குள் மனைவி என்பவள் கணவன் கையாளக் கிடைத்த ஒருபொருளாகவே இருப்பதைக் காட்சிப்படுத்தியிருக்கும். கணவன் மனைவிக்கிடையே எழும் குடும்ப உறவு மேலிட்ட விவாதங்கள் மற்றும் ஊடாட்டங்களை மையமிட்ட குடும்பப் புனைவுப்படைப்பாக அமைந்தபோதிலும், வேலையில்லாத கணவனாக அமையும் ஆண்பாத்திரம், பெண்ணின் விருப்பங்களையும் அபிலாஷைகளையும் தீர்க்கமுடியாமல் தடுமாறுபவனாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. தாம்பத்திய உறவுதான் வாழ்க்கையா என்னும் புரட்சிநோக்கிய மனப்பான்மையில் பெண்ணை இத்தகைய சூழல் நோக்கிச் சிந்திக்கத் தூண்டுவதாகவும் காட்டப்பட்டுள்ளது. சமூகஅரங்கில் இது பல குடும்பங்களிலும் இயல்பு நிகழ்வே எனினும் ஆணாதிக்க மனப்பான்மை ஊறிப்போன ஒருசமூகத்தில் வெளிப்படையாகப் பெண் தனது மனவோட்டங்களை வெளிக்காட்டத் துணியாத காலகட்டத்தில் எழுந்த புனைகதையாதலால் இத்தகைய விமர்சனங்களை அப்படைப்பு எதிர்கொண்டது எனலாம். இக்கதை குறித்து திறனாய்வு நோக்கில் வெங்கட்சாமிதான்,

"ஒரு கணவன் மனைவிக்கு இடையே எழுந்த உறவுச்சிக்கல் பற்றி. தன் மனைவியையும் குழந்தையையும் கவனிக்க கணவனுக்கு நேரமும் இல்லை. சம்பாத்தியமும் இல்லை. கணவனின் அன்புக்கும் கவனிப்புக்கும் ஏங்கும் மனைவிக்கு அதுகிடைக்காது போகவே இந்ததாம்பத்ய உறவுக்குத்தான் என்னபொருள் என்ற கேள்வி அவள் மனத்தில் எழுகிறது. ஆனால் அதற்காக அவள் உறவை முறித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறவில்லை. தனக்கு விதிக்கப்பட்டது இதுதான் என்று அவள் சமாதானம் செய்துகொள்கிறாள். இந்தக் கதையை வைத்துக்கொண்டு அம்பை அணுகிய எந்தப் பத்திரிகையும் அதைப் பிரசுரிக்க மறுத்துவிட்டது. பின்பலவருடங்கள் பிரசுரமாகாது கிடந்த அந்தக் கதை கணையாழி என்னும் ஒரு இடைநிலை பத்திரிகையில் பிரசுரமானது. அந்தக்கதையில் வரும் சாயாமாத்திரம் புனிதமான தாம்பத்திய உறவு அர்த்தமற்றுப் போயிற்றே என்று தனக்குள்ளே கூட நினைத்த பாவத்திற்காக தற்கொலை செய்துகொண்டிருந்தாலோ அல்லது வேறு எவ்விதத்திலாவது அவள் உயிர் துறந்திருந்தாலோ அக்கதையை நிராகரித்த எந்தப்பத்திரிகையும் தடைசொல்லாது பிரசுரித்திருக்கும் என்று கேலிப் புன்னகையோடு கூறுவதாக எடுத்துக்காட்டுகிறார். இதன் வழி அம்பை தனக்கெனத் தனிவழி வகுத்துக்கொண்டு தனதுஎழுத்துக்களைத் தொடுத்தவர் என்பது வெளிப்படையாக விளங்குகிறது. விமர்சனங்களும் எதிர்நிலைக்கருத்துகளும் தான்புதியபடைப்புகளை உருவாக்குவதற்கான உந்துசக்தி எனும் கருத்தியல் கொண்ட அம்பை தம்

படைப்பாக்கங்களின் பேசுபொருளாக அவற்றையே கைக்கொண்டதன் பின்னணியையும் அறியமுடிகிறது (Venkitasaminathan, 2011).

அம்பையின் எழுத்துலகிற்கு ஊக்கம்தந்து அவரை இனம் காட்டித் துலங்கவைத்த படைப்பாக "அந்திமாலை (1966)" நாவலை ஆய்வாளர்கள் முன்வைக்கின்றனர். அக்கால எழுத்துலகம் பெருவிருதாய்க் கருதிய கலைமகள் இதழின் நாராயணசாமி ஐயர் நாவல்விருது அந்திமாலைக்குக் கிடைத்தபிறகே அவர் வாசகர் மற்றும் எழுத்தாளர்கள் மத்தியில் பேசுபடுபொருளாக மாறி, தொடர்ந்து அத்தகைய கதையாக்கங்களை உருவாக்கத் துணைபுரிந்தது என்பர். பெருமளவில் ஆண்கள் மட்டுமே எழுதி வந்த கலைமகள் பத்திரிகையின் பெருமைமிகு பரிசினைப் பெண்எழுத்தாளர் ஒருவர் அதிலும் மரபான கொள்கைகள் மற்றும் பாரம்பரிய வரட்டு வேதாந்தங்களைப் பகடிசெய்து சமுதாயக் கொடுவினைகளுக்கு எதிராகக் குரல்எழுப்பி உரிமை வேட்கை மற்றும் புரட்சி மனநிலையில் எழுதியநாவலுக்கு பெற்றமை அக்காலத்தில் பேசுபொருளாக ஆனது.

கணையாழி தீபாவளி இதழில் (1970) வெளிவந்த 'தனிமையெனும்இருட்டு' சிறுகதை பெண்ணிய உளவியல் ரீதியாகப் படைக்கப்பட்ட கதையாக்கமாகக் கொள்ளவேண்டும். பொருள் வயின் பிரிந்த தலைவனை எண்ணித் தனிமைத்துன்பத்தில் தலைவி உழல்வதான காட்சி அமைப்புகள் இக்கதை யாக்கத்தில். ஒரு பெண் திருமணத்திற்கு முந்தையபருவத்தில் பெற்ற அதே தனிமையைத் திருமணமான பிறகும் பெறுவதாகக் காட்டி அதன் ஊடான உளவியல் சிக்கல்களை பெண்ணியப் பார்வையில் அணுகியுள்ளது. பெண்ணின் விருப்பங்கள் ஏக்கங்கள் எதையும் புரிந்து கொள்ளாத கணவன் ஒருவனால் அவள் தனக்கேயான உலகை கற்பனையில் மாயத்தோற்றமாக உருவாக்கிக் கொள்கிறாள். பணி நிமித்தமாகக் கணவன் வெளியூரில் தங்குவதாகவும், அதனால் உண்டான பிரிவுத்துன்பத்தை ஆற்ற முடியாதவளாய்த் தனிமையை விரட்ட கணவன் அருகில் இருப்பது போலவும் அவன்தன் விருப்பமுணர்ந்து அன்புகாட்டி நடந்துகொள்வது போலவும் கற்பனை செய்து காலத்தை கழிப்பதாகப் பாத்திரப்படைப்பு அமைகிறது.

சமையலறைக்குள் முடங்கிக் கிடக்கும் பெண்ணுலகை 'வீட்டின் மூலையில் ஒருசமையலறை' எனும் கதையாக்கத்தின் வழிவெளிக்காட்டியுள்ளார். மனிதனின் வேட்டைச்சமூக வாழ்வில் இருந்தே உணவைச் சேகரித்தல் ஆணுக்குரியதாகவும் அதனைப் பக்குவப்படுத்திச் சமைத்தல் பெண்ணுக்குரியதாகவும் கட்டமைத்த சமூகவியலை இக்கதையாக்கம் விமர்சனம் செய்கிறது. சமையலறை பெண்கள்மீது செய்யும் ஆதிக்கமும் அழுத்தமும் அதன் வழி மனரீதியாக வெளிப்படும் சிக்கல்களும் இச்சிறுகதையில் விவரிக்கப்பட்டுள்ளன. பெண்ணின் உழைப்பும் திறமையும் சுரண்டப்படுவதுடன் குறுகியவட்டத்திற்குள் இற்சிறையாகச் சமையலறை அமையுமாற்றை இதில் எடுத்துக்காட்டியுள்ளார்.

"ஒளியற்ற, ஜன்னல் அற்ற குறுகிய அந்தச் சமையலறையிலிருந்து கடலில் வசிக்கும் ஆக்டோபஸ் ஜந்துவின் எண்கால்போல், ஆதிக்கக் கரங்கள் நீண்டுவளைத்துப் போட்டன. கால்கள் இறுக்க இறுக்கக் கட்டுண்டு கிடந்தனர் ஆனந்தமாக. அவை இடுப்பை இறுக்கினால் ஒட்டியாணம் என்றும், காலைச் சுற்றினால் கொலுசு என்றும், தலையில் பட்டால் கிரீடம் என்றும் நினைத்துக் கொண்டனர் பெண்கள். நாலாபுறமும் கம்பிகள் எழும்பிய உலகில் புகுந்து கொண்டு அதைராஜ்யம் என்று நினைத்து அரசோச்சினர். இன்று மட்டன் புலவு, நாளை பூரிமசாலா என்று பூமியைத் திருப்பிப்போடும் முடிவுகள் எடுத்தனர். 'பேடி அதிகாரம்' என்று இதனைக் கடுமையாகச் சாடுகிறார் அம்பை.

ஆண் ஒரு செயலைச் செய்யும்போது அதுசரியாகத் தோன்றும் சமூகத்தில் அதையே பெண்செய்தால் மனநிலைப்பிறழ்வு மேலிட்ட பைத்தியக்காரத்தனமாக அது ஏன் தோன்றுகிறது' என்னும் கேள்வியைத் தன் பல்வேறு கதைகளின் ஊடாக விவாதப்பொருள் ஆக்கியிருக்கும் அம்பை துன்பங்களால் துவண்டு போகாத பெண்ணிய உளவியலையும் இனம்காட்டுகிறார். பெண்ணின் மனவலிமை மலையை ஒத்தது என்னும் மையநீரோட்ட மிக்கபுனைவுகள் அவரது அடையாளமாகவே அமைந்துள்ளன. தந்தைக்கும் மகனுக்கும் இடையே அமையும் தோழமை உணர்வையும் உறவு நிலைப்பட்ட நெருக்கத்தையும் பல்வேறு படைப்பாளிகள் எடுத்துக்காட்டியுள்ளனர் ஆயினும் தாய்க்கும்

மகளுக்கும் இடையேயான தோழமை உணர்வையும் ஒருவரையொருவர் மனரீதியாகப் புரிந்துகொள்ளும் நிலையினையும் காட்டில் ஒருமான் கதையில் வெளிப்படுத்துகிறார் இதேபோல ஒருதாயின் கடந்தகாலத்து கசங்கிய வாழ்வியலை அவள்பெற்ற மகளின் நினைவுப் பார்வையின் வழி 'பிரசுரிக்கப்படாத கைப்பிரதி' எனும் சிறுகதையில் பதிவு செய்துள்ளார்.

'ஒவ்வொரு கதை எழுதும்போதும் "இது பெண்ணியக் கதை. இதில் ஆணாதிக்கம் குறித்து எழுதுவேன்" என்று நினைத்துக் கொண்டு எழுதமுடியாது. ஆனால் வாழ்க்கையிலேயே ஊறிப்போயிருக்கும் ஒன்று ஏதோ ஒருவகையில் கதைகளில் கசிந்தபடிதான் இருக்கும். எந்தவிதப் பொருளும் தரவிரும்பவில்லை என்று உருவமற்ற கோடுகளையும், நிறங்களையும் வரைந்தபோது கூட அதனின்றும் பலஅர்த்தங்கள் பார்ப்பவரின் வாழ்க்கையின் கண்களுக்கு ஏற்பஅமைந்து கொண்டேதான் இருக்கும். மிகவும் ஆழமாகத் தன் வாழ்க்கையினுள் புகும்போது அந்தரங்கமும் அரசியல்வெளிக்கு வந்து உலகளாவிய ஒன்றாகி விடுகிறது' என தனது இலக்கிய ஓட்டத்தை வகுத்து எல்லை கடந்த நிலையில் தனது படைபாக்கவெளியை அமைத்துக்கொண்ட பெருமை அம்பைக்கு உண்டு (Sridhar Narayanan, 2014). சமூக இயங்குதளங்களில புரையோடிப்போயிருக்கும் பிற்போக்குத்தனங்கள், குடும்ப நிர்பந்தங்கள் ஒழுக்கவியல் மேலிட்டு திணிக்கப்பட்டுள்ள கற்பிதங்கள் குறித்த விமர்சன ரீதியிலான கதையாடல்களுக்கு பெருமளவில் இடமளித்திருப்பதைக் காணமுடிகிறது. கற்களும் முட்களும் சூழ்ந்த பாதை, சமையலறை என்னும் சிறை, உடல் மீது ஏற்றப்படும் சுமை எனத் தலைப்பிடுவதிலேயே அவர் வாசகர்களிடம் எதை எவ்வாறு கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும் எனும் நுண்மையை அறிந்திருப்பதாக உணரமுடிகிறது. வன்முறை என்பது அடித்து நொறுக்குவது உடல் உறுப்புகளைச் சிதைத்துத் துன்புறுத்துவது எனும் மேலோட்ட புரிதலில் மிதந்து கொண்டிருந்த மனங்களில், பெண் உடலியல் உளவியல் சார்ந்து நுட்பமாய்த் தொழிற்படும் வன்முறையின் பல்வேறு வடிவங்களைக் காட்சிப்படுத்தும் கதையுலகைக் கைக்கொண்டார். காலவர்த்தமானங்களைக் கடந்து பெண்ணியச் சமூகம் அடைந்திருக்கும் மாற்றங்களையும் மறுதலிப்புகளையும் தன்கதையாடலின் பேசுபொருளாக எடுத்துக்கொண்டு அவர்கள் அறிந்தும் அறியாமலும் அவர்கள்மீது நிகழ்த்தப்படும் வன்முறைகளையும் அடக்குமுறைகளையும் பகடியோடு பதிவுசெய்தார். குடும்ப இயங்கியலில் ஒருபெண்ணின் மீதான வன்முறையை ஆண்தான்நிகழ்த்த வேண்டும் என்பதில்லை ஆதலால் பெண்ணின் வழியாகச் செயல்படுத்தப்படும் வன்முறைகளையும் விவாதப் பொருளாக்கினார். குறிப்பாகக் குடும்ப அமைப்புக்குள் குழந்தைகள் மீது நடத்தப்பெறும் பாலியல் வன்முறையை மைமல்பொழுது கதையின் வழி நுணுக்கமாய்ப் பதிவு செயதிருப்பார். குடும்ப கௌரவம் சொத்துரிமை மேலிட்ட பொருளாதார நெருக்கடிகளால் பெண்ணின் நுண்ணுணர்வைச் சிதைப்பது கல்வி மேலிட்ட அறிவுசார் துறையிலிருந்து விலக்கிவைப்பது என இச்சமூகம் பெண்கள் மீது இழைக்கும் அநீதிகளையும் அறமற்ற செயல்களையும் கவனப்படுத்தும் கதைக்களங்களைக் கையாண்டிருப்பார்.

அம்பையின் 'சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப்பறவை' சிறுகதைத் தொகுப்புக்காக 2021-ம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது. தமிழில் சாகித்ய அகாதெமி விருதைப் பெறும் நான்காவது பெண்ஆளுமை எனினும் விருதுகளோ பாராட்டுரைகளோ தன்னை எந்தவட்டத்துக்குள்ளும் அடைத்துவிடாது என்றும் அவை எந்த விதத்திலும் தான்பேசும் பெண்ணிய அரசியலுக்கும் காணவிழையும் மாற்றங்களுக்கும் பயன்தராது என்றும் எண்ணுபவர். பெண்ணியச் சமூகத்தின் வரலாற்றையும் வாழ்வியலையும் பதிவுசெய்யும் நோக்கில் 'ஸ்பாரோ' (SPARROW-Sound and Pictures Archives for Research on Women) என்னும் பெண்மய ஆவணக்காப்பகத்தை நிறுவி, அதன் இயக்குநராகவும் செயல்பட்டுவரும் அம்பை குரல் நெறிக்கப்பட்டு, புறந்தள்ளி ஒதுக்கி வைக்கப்பட்ட பெண்களின் வலிகளுக்கு குரலும் மொழியும் அளித்து அவர்களின் வரலாற்றை ஆவணப்படுத்தும் அளப்பரிய பணியைச் செய்து வருகிறார்.

முடிவுரை

நவீனத் தமிழிலக்கிய வரலாற்றில் தன்னுடைய தேர்ந்த படைப்பிலக்கியங்கள் மூலம் சமூகத்தில் பெண்களின் விடுதலைக்காகவும் அவர்களின் வலுவான ஆளுமை வளர்ச்சிக்காகவும்

பெண்ணியக் குரலை உயர்த்திக் காட்டிய படைப்புகளாகவே அம்பையின் படைப்புகள் அமைகின்றன. இந்திய விடுதலைக்குப் பின்னர் உருவான சமூகமாறுதல்களில் பெண்களின் நிலைப்பாடுகளும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களும் பற்றிய படைப்பாக்கங்களினூடாக தானும் ஒருபெண் என்னும் மனஉணர்வு ஒன்றி யதார்த்தபூர்வமாக அதனை இனம் காட்டியுள்ளார். ஆணாதிக்கக் கருத்தியல் முனைப்பு பெற்ற ஒரு சமூகத்தில் பெண்ணின் இருப்பு, உரிமை நோக்கிய அதிகாரப் பங்கீடு, உடல் மன ரீதியாக எதிர்கொள்ளும் சவால்கள், சமூக இயங்குதளத்தில் அவளுக்கான இடம், மதிப்பீடுகள் ஆகியனவற்றைப் பற்றி எள்ளல் நடையில் படைத்துள்ள புனைவுகள் மற்ற படைப்பாளர்களிடமிருந்து அவரை வேறுபடுத்தி முதன்மைப்படுத்துகின்றவை எனலாம். குறிப்பாகப் பெண்ணிய பேசுபொருள் குறித்த கருத்தியலில் மற்ற படைப்பாளர்களிடம் உள்ள தயக்க மனநிலையை அம்பையிடம் காணமுடிவதில்லை. பெண்மையின் தத்துவ அழகியல், அரசியல், ஆழ்மனச்சிக்கல்கள், உளவியல் ஊடாட்டங்கள், பெண்மையவாத தருக்க நிலையிலான அடிப்படைகள் என பெண்ணியக் கோட்பாடுகள் மேலிட்டு அம்பை முன்வைக்கும் கருத்துகள் உலகின் தலைசிறந்த பெண்ணியப் படைப்பாளுமையாக அவரை இனம் காட்டுகின்றன. வெகுஜனப் பெண்களுள் ஒருவராக பொது மனப்பான்மையோடு இந்தச் சமூகஅமைப்பை அணுகுவது, இவற்றிலிருந்து விடுபட்டவராக இந்தப் பிரச்சினைகளுக்குள் குறுக்கீடு செய்வது என பெண்ணியம் சாரந்த இருவேறு படிநிலைகளையும் இனங்காட்டுவனாக அம்பையின் புனைவுகளை அடையாளப்படுத்துவது பொருத்தமாயிருக்கும்.

References

Jeyamohan, (2011) Naveenath Tamil Ilakiya Arimugam, Kizhakku Pathipagam, Salem, India

Sridhar Narayanan, (2014) Siragu virithu eluntha paravai, Ambaiyudan Uraiyadal, Solvanam.

Venkitasaminathan, (2011) Kalai Ilakiyam Velipadu, Crea Veliyedu, Chennai, India

Funding: No funding was received for conducting this study.

Conflict of Interest: The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License